**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# மக்கள்தொகையுடன் ஜாதிவாரி கணக்கெடுப்பு

## மத்திய அரசுக்கு முதல்வர் ஸ்டாலின் வேண்டுகோள்

**சென்னை, நவ. 27:** மக்கள்தொகை கணக்கெடுப்புடன் ஜாதிவாரி கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்த வேண்டும் என்று மத்திய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும், இடஒதுக்கீடு அமலாக்கத்தைக் கண்காணிக்க அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் கொண்ட குழு அமைக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

முன்னாள் பிரதமர் வி.பி.சிங் நினைவு நாளையொட்டி, சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரியில் அவரது சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை திறந்து வைத்தார்.

மாநிலக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உத்தர பிரதேச எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் முதல்வருமான அகிலேஷ் யாதவ், வி.பி.சிங் மனைவி சீதாகுமாரி, மகன் அஜய் சிங் உள்ளிட்ட குடும்பத்தினர் பங்கேற்றனர்.

இதைத் தொடர்ந்து, சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

காலம் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமூக நீதிக் கதவைத் திறந்து வைத்தவர் வி.பி.சிங். பிரதமர் பதவி போனாலும் பரவாயில்லை என்று அதில் உறுதியாக இருந்தவர். அவருக்கு சிலை அமைப்பதை திராவிட மாடல் அரசு தனது கடமையாகக் கருதுகிறது. சமூக நீதியைக் காக்கிற கடமையில் இருந்து துளியளவும் வழுவாமல் திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது.

**இளைஞர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்:** வி.பி.சிங் பற்றியும், அவரது தியாக வாழ்க்கை குறித்தும் இந்திய மண்ணில் உள்ள ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக, இளைஞர்களுக்கு அவருடைய வாழ்வு திரும்பத் திரும்பச் சொல்லப்பட வேண்டும்.



சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் முழு உருவச் சிலையை திங்கள்கிழமை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், உத்தர பிரதேச முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவ், வி.பி.சிங் மனைவி சீதா குமாரி, மகன் அஜய் சிங், அமைச்சர்கள் துரைமுருகன், க.பொன்முடி, எ.வ.வேலு, உதயநிதி ஸ்டாலின், மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா உள்ளிட்டோர்.

சமூக ரீதியாகவும், கல்வியிலும் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மத்திய அரசுப் பணியிடங்களில் 27 சதவீத இடஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற பி.பி.மண்டல் ஆணையப் பரிந்துரையை அமல்படுத்திய சமூக நீதிக் காவலர் வி.பி.சிங். பிரதமர் பதவியில் இருந்த 11 மாதங்களில் பல சாதனைகளைச் செய்து காட்டிய மாபெரும் சாதனையாளர்.

அவரது முயற்சியால் இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட மக்கள் ஓரளவு முன்னேறியிருக்கிறார்கள். நாம் இன்னும் பல உயரங்களுக்குச் செல்ல வேண்டும்.

**உரிமைகள் முழுமையாகக் கிடைக்கவில்லை:** நமக்கான உரிமைகள் இன்றைக்கும்கூட முழுமையாகக் கிடைக்காத, கிடைக்க முடியாத சூழல்தான் நிலவுகிறது. மத்திய அரசின் செயலர்கள் 89 பேரில் 85 பேர் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர்கூட இல்லை.

மத்திய அரசின் கூடுதல் செயலர்கள் 93 பேரில் 82 பேர் உயர் ஜாதியினர்; பிற்படுத்தப்பட்டவர் கிடையாது. 275 இணைச் செயலர்களில் 19 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்கள். உயர்நீதிமன்றங்களில் உள்ள 604 நீதிபதிகளில் 72 பேர் மட்டும்தான் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் இடஒதுக்கீடு முறை அமல்படுத்தப்படவில்லை. அரசுத் துறைகளின் பதவி உயர்வுகளின்போதும் இடஒதுக்கீட்டு முறை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையை மாற்றுவதற்குத் தொடர்ந்து உழைக்க வேண்டும். அதுதான் வி.பி.சிங் போன்றோருக்கு நாம் செலுத்தும் உண்மையான புகழ் வணக்கம். அந்தப் பணியில் திமுக ஒருபோதும் சோர்ந்து போகாது.

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் கோரிக்கையை ஏற்று சென்னையில் உள்ள விமான முனையங்களுக்கு முன்னாள் முதல்வர்கள் காமராஜர், அண்ணா பெயர்களை வைத்தது, காவிரி நடுவர் மன்றத்தை அமைத்தது எனத் தமிழகம் சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டவர் வி.பி.சிங். கருணாநிதி மீதும், தமிழகத்தின் மீதும் அவர் அளவுகடந்த பாசம் வைத்திருந்தார்.

**மத்திய அரசுக்குக் கோரிக்கைகள்:** சமூக நீதியின் காவலரான வி.பி.சிங்குக்கு சிலை வைத்ததன் மூலமாக தமிழ்நாடு அரசு பெருமை கொள்கிறது.

சமூக நீதிப் பயணத்தில் நாம் செல்ல வேண்டிய தொலைவு மிக அதிகம். வி.பி.சிங் சிலை திறப்பு விழாவில் ஒரு சில கோரிக்கைகளை மத்திய அரசுக்கு வைக்க விரும்புகிறேன். தாமதமாகியுள்ள மக்கள்தொகை கணக்கெடுப்பை மத்திய அரசு நடத்தும்போது அதனுடன் ஜாதிவாரி கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்த வேண்டும்.

பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடியின மக்களுடைய இடஒதுக்கீடு முறையாக அளிக்கப்பட வேண்டும். இந்த இடஒதுக்கீடு முறை முழுமையாக அமல்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவும், உறுதி செய்யவும் அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

விழாவில் தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா வரவேற்றார்.

## 'சமூக நீதி ஒரு மாநிலப் பிரச்னையல்ல'

சமூக நீதி என்பது ஒரு மாநிலத்தின் பிரச்னையல்ல என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலை திறப்பு விழாவில் அவர் பேசுகையில், சமூக நீதி என்பது ஒரு மாநிலத்தின் பிரச்னை அல்ல. அனைத்து மாநிலங்களின் பிரச்னையாகும். ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஜாதி, வகுப்பு அளவீடுகள் வேறுபடலாம். ஆனால், பிரச்னை ஒன்றுதான், அதுதான் புறக்கணிப்பு.

எங்கெல்லாம் புறக்கணிப்பு, ஒதுக்குதல், தீண்டாமை, அடிமைத்தனம், அநீதி இருக்கிறதோ அங்கெல்லாம் அதை முறிக்கின்ற மருந்தாக இருப்பதுதான் சமூக நீதி. அந்த சமூக நீதி தழைக்க வேண்டும் என்றார்.

## சமூக நீதிக்கான இலக்குகளை எட்டும் வரை போராட்டம்: அகிலேஷ்

சமூக நீதிக்கான இலக்குகளை எட்டும்வரை நமது போராட்டம் தொடரும் என்று உத்தர பிரதேச மாநில எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் முதல்வருமான அகிலேஷ் யாதவ் கூறினார்.

சென்னையில் திங்கள்கிழமை நடைபெற்ற முன்னாள் பிரதமர் வி.பி. சிங் சிலை திறப்பு விழாவில் அவர் பேசியதாவது:

முன்னாள் பிரதமர் வி.பி.சிங் காலத்தில் நான் அரசியலில் இல்லாவிட்டாலும், அந்தக் காலத்தில் நடந்த அரசியல் நிகழ்வுகளைப் பார்த்தும், படித்தும் இருக்கிறேன். மண்டல் ஆணையம் அளித்த பரிந்துரைகளை பிரதமராக இருந்த வி.பி.சிங் அமல்படுத்தினார்.

வி.பி.சிங் கொண்டுவந்த இடஒதுக்கீட்டை எதிர்த்துப் போராடியவர்கள் இன்று 10 சதவீத இடஒதுக்கீட்டைப் பெற்று வருகிறார்கள். ஆனால், அந்தக் காலத்தைப்போல், இன்று நாம் அந்த 10 சதவீத இடஒதுக்கீட்டை எதிர்த்துப் போராட்டம் நடத்தவில்லை.

முதல்வர் மு.க.ஸ்டாலின், அவரது தந்தை முன்னாள் முதல்வர் கருணாநிதியின் தடத்தைப் பின்பற்றி செயல்பட்டு வருகிறார். மக்கள் உங்கள் பக்கம் நின்று ஆதரவளிப்பார்கள்.

ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். இதுபோன்ற சமூக நீதிக்கான இலக்குகளை எட்டும்வரை நமது போராட்டம் தொடரும்.

வி.பி.சிங்குக்கு அமைக்கப்பட்டுள்ள சிலை எதிர்வரும் மக்களவைத் தேர்தலுக்கான மிகப்பெரிய செய்தியாக இருக்கும் என்றார் அவர்.

EVA STALIN IAS

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# சவால்கள் நிறைந்த உள்நாட்டுப் பாதுகாப்பு!

[illegible]



பெ. கண்ணப்பன் ஐபிஎஸ்

[illegible]

**போதைப் பொருட்கள் கடத்தப்படும் வழித்தடங்கள் வழியாக வெடிபொருட்களையும், ஆயுதங்களையும் இந்தியாவிற்குள் கொண்டுவரும் முயற்சியில் தீவிரவாதிகள் ஈடுபடுகின்றனர். அந்த வழித்தடங்கள் வழியாக தீவிரவாதிகள் இந்தியாவினுள் நுழைந்து, தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்ட சம்பவங்களும் உண்டு.**

[illegible]

கட்டுரையாளர்:
**காவல்துறை உயர் அதிகாரி (ஓய்வு).**

EVA

# தொலைநோக்குத் திட்டம்!

இந்தியாவின் அனைத்து வேளாண் பிரச்னைகளுக்கும் உடனடித் தீர்வு என்பது சாத்தியமில்லை. வளர்ச்சி அடைந்த நாடுகளைப் போல அல்லாமல், வேளாண்மை என்பது பலருக்கும் வாழ்வாதாரமே தவிர தொழில் அல்ல. உற்பத்தியில் கணிசமான பகுதி பெரும் நிலச்சுவான்தார்களுடையது என்றாலும், எண்ணிக்கை அளவில் குறு, சிறு விவசாயிகளின் எண்ணிக்கை பலமடங்கு அதிகம்.

பெரிய நிலச்சுவான்தார்களைப் போலல்லாமல் குறு, சிறு விவசாயிகள் தங்களது உற்பத்திக்கு நியாயமான விலை பெறுவதில்லை. அவர்களது உழைப்பையும், முதலீட்டுக்கான வட்டியையும், உற்பத்திச் செலவையும் கணக்கிடும்போது அவர்கள் ஒவ்வொரு சாகுபடியிலும் பெரும் இழப்பை எதிர்கொள்கிறார்கள். அதனால்தான் விவசாயிகளின் தற்கொலையைத் தடுக்க முடியாத நிலைமை தொடர்கிறது.

குறு, சிறு விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் ஏராளம். அடிப்படை உள்ளீட்டுச் செலவுக்கான முதலீடு தொடங்கி, அறுவடை முடிந்து சந்தைக்குக் கொண்டுசெல்லும் வரையிலான முதலீட்டுக்காக அவர்கள் எதிர்கொள்ளும் பெரும்பாட்டைச் சொல்லி மாளாது. தங்களது உற்பத்தியைப் பாதுகாத்து சாதகமான சூழலில் விற்பதற்கான பொருளாதார வசதியோ, சேமிப்பு வசதியோ குறு, சிறு விவசாயிகளுக்கு இல்லை. அதேபோல, தங்களது உற்பத்தியை ஈடாகக் கொடுத்து குறைந்த வட்டியில் கடன் பெறும் வாய்ப்பும், ஏனைய தொழில்களுக்கு இருப்பதுபோல அவர்களுக்கு இல்லை.

இந்த இரண்டு குறைபாடுகளையும் களையும் நோக்கத்தில் மத்திய வேளாண் அமைச்சகம் பிரதமரின் கிஸான்பாய் திட்டம் (பிரதமரின் விவசாயியின் தோழன் திட்டம்) ஒன்றை முன்னெடுக்க இருக்கிறது. அதன்படி குறு, சிறு விவசாயிகளின் உற்பத்தியைக் குறைந்த கட்டணத்தில் கிடங்குகளில் சேமிக்க உதவுவது; குறைந்த வட்டியில் அவர்களுக்கு குறுகிய கால கடன் வழங்குவது ஆகிய இரண்டு திட்டங்களும் அறிவிக்கப்பட இருக்கின்றன.

சேமிப்புக் கிடங்கு வாடகை மானியம் என்கிற திட்டத்தின்படி குறு, சிறு விவசாயிகள் அருகில் இருக்கும் சேமிப்புக் கிடங்குகளில் தங்களது உற்பத்திப் பொருள்களைப் பாதுகாப்பதற்கான கட்டணத்துக்கு மானியம் வழங்க திட்டமிடப்படுகிறது. அதன்படி, அருகில் உள்ள சேமிப்புக் கிடங்கில் பாதுகாக்கப்படும் இரண்டு ஹெக்டேருக்கும் குறைவான விளைநிலம் உள்ள குறு, சிறு விவசாயிகளுக்கு குவிண்டாலுக்கு மாதம் ரூ.4 வாடகை மானியம் தரப்படும்.

இந்தத் திட்டத்தில் சில குறைபாடுகள் இல்லாமல் இல்லை. 'ஈ-நாம்' உள்ளிட்ட இணைய சேவை மூலம் விற்கப்படும் உற்பத்திகளுக்கு மட்டுமே இந்த மானியம் வழங்கப்படும். அதனால் இந்தியாவிலுள்ள 12.6 கோடி குறு, சிறு விவசாயிகளில் 'ஈ-நாம்' இணைய விற்பனையில் இணைந்திருக்கும் 1.76 கோடி விவசாயிகள் மட்டுமே உடனடியாகப் பயனடைவார்கள். குறு, சிறு விவசாயிகளுக்கு இணைய விற்பனையை அறிமுகப்படுத்தி அவர்களை 'ஈ-நாம்' வளையத்தில் இணைப்பது என்பது அரசின் தொலைநோக்குத் திட்டமாக இருக்கக் கூடும்.

இந்தத் திட்டத்தின்படி, அதிகபட்சம் மூன்று மாதங்களுக்கும், குறைந்தபட்சம் 15 நாள்களுக்கும் தங்களது உற்பத்தியை தானிய கிடங்குகளில் பாதுகாக்கும் குறு, சிறு விவசாயிகள் மட்டுமே மானிய உதவி பெறுவார்கள். அதிலும்கூட ஆண்டுக்கு இரண்டு சாகுபடிக்கு மட்டுமே இந்த மானியம் வழங்கப்படும். இரண்டு ஹெக்டேர் நிலப்பரப்பில் அரசு கணக்குப்படியான உற்பத்தி அடிப்படையில் மானியம் வழங்கப்படும் என்கிற நிபந்தனையும் காணப்படுகிறது.

சேமிப்புக் கிடங்கு வாடகை மானியத்தின் மூலம் குறு, சிறு விவசாயி ஆண்டொன்றுக்கு 53 குவிண்டால் கோதுமை, 45 குவிண்டால் அரிசி, 38 குவிண்டால் ஏனைய தானியங்கள் ஆகியவற்றுக்கு வாடகை மானியம் பெறலாம். விவசாயியின் வருடாந்திர மானியம் ரூ.420-லிருந்து ரூ.1,176 வரை கிடைக்கக் கூடும். குறு, சிறு விவசாயிகளை சேமிப்புக் கிடங்குகளுக்கும் 'ஈ-நாம்' வர்த்தகத்துக்கும் இந்த மானியத் தொகை ஈர்க்குமா என்கிற ஐயப்பாடு எழுகிறது.

'பிராம்ட் ரீபேமண்ட் இன்சென்டிவ்' என்கிற கடன் திட்டம் சேமிப்புக் கிடங்குகளில் இணைய ரசீதுகளின் அடிப்படையில் 'வேளாண் கடன் அட்டை' (கிஸான் கிரெடிட் கார்டு) மூலம் வழங்கப்பட இருக்கிறது. இதுவும் இணைய வழி விற்பனையில் ஈடுபடுபவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். கடன் வாங்கும் விவசாயி, சேமிப்புக் கிடங்கு மேம்பாடு / ஒழுங்காற்று ஆணையத்தில் இணைந்தவராக இருப்பது அவசியம்.

இந்த இரண்டு திட்டங்களுமே வேளாண் சேமிப்புக் கிடங்குகளையும் இணைய வழி வர்த்தகத்தையும் அங்கீகரித்திருக்கும் மாநிலங்களுக்கு மட்டுமே பொருந்தும். அதன்படி பார்த்தால் இந்தத் திட்டத்துக்கு உடனடியாக பெரிய அளவில் வரவேற்பு இருக்காது என்பதை அரசு உணர்ந்திருப்பதாகத் தெரிகிறது. அதனால்தானோ என்னவோ, அடுத்த நிதியாண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு, ஏழு மாநிலங்களில் மட்டும் இந்தத் திட்டம் முதல்கட்டமாக செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்காக ரூ.170 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்போவதாகத் தெரிகிறது.

இந்தியாவின் வேளாண்மையிலும், விவசாயிகளின் அணுகுமுறையிலும் பல சீர்திருத்தங்கள் அத்தியாவசியம் என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க வழியில்லை. இணைய விற்பனையில் வேளாண் பெருமக்கள் தங்கள் உற்பத்தியை சந்தைப்படுத்துவதை ஊக்குவிக்கும் அரசின் முயற்சி வரவேற்புக்குரியது. அதே நேரத்தில் வேளாண் அமைச்சகத்தின் இரண்டு திட்டங்களும் முன்வைக்கும் நிபந்தனைகள் எந்த அளவுக்கு அவர்களை ஈர்க்கும் என்று யோசிக்கத் தோன்றுகிறது.

EVA STALIN

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# நீரின் அருமை உணர்வோம்

**முனைவர் என். பத்ரி**

நாம் வாழும் உலகம் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களால் ஆனது. இவை நமக்கு அளிக்கப்பட்ட இயற்கையின் கொடைகள். இவற்றில் நெருப்பினைத் தவிர மற்ற அனைத்தையும் நாம் மாசுபடுத்தி வருகிறோம். நெருப்பினை மட்டும் நம்மால் மாசுபடுத்த இயலவில்லை. நாமே திருந்தும்வரை அரசின் சட்டங்கள் எதுவும் நமக்கு கைகொடுக்கப் போவதில்லை.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் தண்ணீர் டைனோசர்கள் காலத்திலிருந்தே ஏதோ ஒரு வடிவத்தில் இருந்து வருகிறது. பூமியின் மேற்பரப்பு மூன்றில் இரண்டு பங்கு நீரால் சூழப்பட்டிருக்கிறது. இந்த நீர் கடல்கள், ஆறுகள், ஏரிகள், ஓடைகள் ஆகியவற்றில் பரவியிருக்கிறது.

நிறைய நீர் இருப்பினும், அதில் 0.3%-க்கும் குறைவாகத்தான் மனித நுகர்வுக்கு உதவக் கூடியதாக இருக்கிறது. வணிகமயமாக்கலும், தொழில்மயமாக்கலும், பெருகி வரும் மக்கள் தொகையும் அந்த விழுக்காட்டைத் தற்காலத்தில் குறைத்து வருகின்றன.

மனிதர்களுக்குக் குடிப்பதற்கும், சமைப்பதற்கும், துணி துவைப்பதற்கும், பயிர்களின் பாசனத்திற்கும் நீர் பயன்படுகிறது. நமது உடலும் பெரும்பகுதி நீரைக் கொண்டிருக்கிறது. எனினும், நீர் ஆதாரங்களை நாம் தொடர்ந்து மாசுபடுத்தி வருவது அதிகரித்து வருகிறது. நீர் மாசுபாடு உலகில் வாழும் எந்தவொரு உயிரினத்திற்கும் தீங்கு விளைவிப்பதாகும்.

கோவை மாவட்டத்தில் சமீபத்தில் பெய்த கனமழை,நொய்யல் ஆற்றில் நீர்வரத்தை அதிகரித்தது. இது சாயப்பட்டறைகளுக்குவசதியாகப்போய்விட்டது. தொழிற்சாலை உரிமையாளர்கள், தமது தொழிற்சாலை கழிவு நீரை நொய்யல் ஆற்றில் கலந்துவிட்டனர். இதனால் நொய்யலோடு சேர்ந்து காவிரி ஆற்று நீரும் மாசடைகிறது.

பாசனம் செய்யப் பயன்படும் இந்நீர் அப்பகுதி விவசாயத்தை மிகவும் பாதிக்கிறது. இதைப்போன்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் நீரினை மாசுபடுத்தும் நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருவது வேதனைக்குரியது. நீர் மாசுபடும்போதெல்லாம் அதைச்சார்ந்த நிலமும் மாசடைவது தவிர்க்கவியலாதது.

மாசுபட்ட நீரால் ஏற்படும் மினமாட்டா நோய், முதல் முதலில் 1956-இல் ஜப்பானில் உள்ள மினமாட்டா நகரில் கண்டுபிடிக்கப்பட்டது. இது சிஸ்ஸோ கார்ப்பரேஷனின் ரசாயன தொழிற்சாலையில் இருந்து வெளியேறிய கழிவுநீரில் மெத்தில் மெர்குரி கலந்திருந்தால் ஏற்பட்டது என்று கண்டறியப்பட்டது.

இது 1932 முதல் 1968 வரை தொடர்ந்தது. மினமாட்டா மக்கள் கடல் உயிரினங்களை உண்ணும்போது அதில்பாதரச விஷ பாதிப்பு ஏற்பட்டது. அதனால், பூனை, நாய், பன்றி போன்ற விலங்குகள் மட்டுமல்லாமல் மனித உயிரிழப்புகளும் 36 ஆண்டுகள் தொடர்ந்தன.

நீர்நிலைகளில் கரிம, கனிமப் பொருட்கள் சிதைவுறுதல், தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர், வீட்டுக் கழிவு நீர், கதிரியக்கக் கழிவுகள், கச்சா எண்ணெய், பயிர்களைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லிகள் போன்றவை நீரைபெரிதும் மாசுபடுத்துகின்றன. நச்சு ரசாயனங்களால் தண்ணீரில் ஆக்சிஜனின் அளவு குறைந்து வருகிறது.

குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருவதாக பல நேரங்களில் புகார்கள் வந்தவண்ணம் இருக்கின்றன. இந்த நீரைக் குடிப்பவர்கள் வயிற்றுப்போக்கு, காலரா உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர். இவர்களில் பலர் இறக்கவும் நேரிடுகிறது.

நீர்நிலைகளில் நாம் வீசும் திடக்கழிவுகள் நீர்வாழ் உயிரினங்களுக்கும் தீங்கு விளைவிக்கின்றன. இதனால், இது சுற்றுச்சூழல் அமைப்பையே சீர்குலையவைக்கிறது. கடல் உணவுகளை உண்பவர்களுக்கும் உடல்நலக் குறைபாடுகள் ஏற்படும் அபாயம் உள்ளது.

நீர் மாசுபடுவதால் ஏற்படும் நச்சு ரசாயனங்கள், நாம் உட்கொள்ளும் உணவின் வழியாகச் நம் உடலில் நுழைந்து நோய்களையும் சில நேரங்களில் மரணத்தையும் ஏற்படுத்துகின்றன. பெரும்பாலான நேரங்களில், இது உள்ளூர் மக்களை மட்டும் பாதிக்கலாம். ஆனால் காலப்போக்கில் நாடு முழுதும் இவை எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

நீர் மாசுபாடு தொடர்ந்து நடைபெற்று வருவதால் குடிக்கும் தண்ணீரையே விலை கொடுத்துவாங்கும்அவலநிலைஏற்பட்டுள்ளது. நீர் மாசுபாட்டின் விளைவுகள் எதிர்காலத்தில் இன்னும் மோசமாக இருக்கக்கூடும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பல்வேறு பொருட்களை எளிதில் கரைக்கும் சிறந்த கரைப்பான் நீர். எனவே, கழிவுகளை நேரடியாக நீர்நிலைகளுக்கு அனுப்புவதை நிறுத்தவேண்டும். ஆற்று நீரில் கழிவுகளை வெளியேற்றும் தொழிற்சாலைகளுக்கு கடும் தண்டனை விதிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

நீர்நிலைகளைப் பாதுகாக்க முறையான வழிமுறைகள் பின்பற்றப்படுவதை நீரியல் வல்லுனர்கள் உறுதி செய்ய வேண்டும். நீர் மாசுபாட்டின் பாதகமான தாக்கத்தை பொதுமக்கள் சரியாக புரிந்துகொள்ள வேண்டும். இதை உறுதிசெய்ய அரசு விழிப்புணர்வு கூட்டங்களை தேவைப்படும் இடங்களில் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

நீர்நிலைகளைச் சுற்றி அதிக மரங்கள் நடப்பட வேண்டும். இயற்கையாகவே மறுசுழற்சி செய்ய அவை உதவுகின்றன. 'வாட்டர் ஹைசின்த்' என்றழைக்கப்படும் தாவரமானது, நீர்நிலைகளில் கரைந்துள்ள காட்மியம், பாதரசம் போன்ற அபாயகரமான சேர்மங்களை உறிஞ்சி, நீர்மாசுகளை நீக்கி சுற்றுச்சூழலைப் பாதுகாக்கிறது.

நீர்நிலைகளில் ரசாயனங்கள், பிற பொருட்களை நேரடியாக வெளியேற்றும் முன், தொழிற்சாலைகள் அவற்றின் கழிவுகளை கவனமாகக் கையாள வேண்டும். தொழிற்சாலைகள் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை உருவாக்க வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும் சுமார் ஆறு பில்லியன் (600 கோடி) கிலோகிராம் குப்பை கடலில் கொட்டப்படுகிறது. இது தொடர்ந்தால் விரைவில் நமது உலகம் மனிதர்கள் வாழத் தகுதியற்றதாக மாறிவிடும். நம் குழந்தைகளுக்கு நீர்மாசு சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இப்போதாவது நீரின் அருமையை நாம் உணராமல் போனால், வருங்காலத்தில் நமது சந்ததியினர் குடிக்க நீர் கிடைக்குமா என்பது கேள்விக்குறியே.

# அயர்லாந்து எழுத்தாளர் பால் லிஞ்ச்சுக்கு புக்கர் பரிசு



**லண்டன், நவ.27:** 'ப்ரோஃபெட் சாங்' நாவலை எழுதிய அயர்லாந்து எழுத்தாளர் பால் லிஞ்ச்சுக்கு நிகழாண்டுக்கான புக்கர் பரிசு வழங்கப்பட்டது.

உலகில் எந்த நாட்டைச் சேர்ந்த வரும் ஆங்கிலத்தில் எழுதி பிரிட்டன் மற்றும் அயர்லாந்தில் வெளியிடப்படும் நாவலுக்கு ஆண்டுதோறும் புக்கர் பரிசு வழங்கப்படுகிறது.

நிகழாண்டு அந்த விருதுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து 163 நாவல்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றில் அயர்லாந்து எழுத்தாளர் பால் லிஞ்ச் எழுதிய 'ஃப்ரோஃபெட் சாங்' நாவல் புக்கர் பரிசுக்குத் தேர்வு செய்யப்பட்டது.

அயர்லாந்து தலைநகர் டப்ளினை கதைக்களமாகக்கொண்டுஎழுதப்பட்ட அந்த நாவல், சர்வாதிகாரம் மற்றும் போரால் பாதிக்கப்படும் அயர்லாந்தில் தனது குடும்பத்தைக் காப்பாற்ற போராடும் பெண்ணின் கதையை விவரிக்கிறது.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், விருதும் 63,000 டாலர் (சுமார் ரூ.52.50 லட்சம்) பரிசுத் தொகையும் பால் லிஞ்ச்சுக்கு வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு புக்கர் பரிசு வென்ற இலங்கை எழுத்தாளர் ஷெஹான் கருணதிலக விருதை வழங்கினார்.

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# சுரங்க விபத்து: இரு முறைகளிலும் துளையிடும் பணி தீவிரம்

## சுரங்கத்தின் மறு முனையிலிருந்து மூன்றாவது மீட்புப் பாதைக்காக துளையிடவும் நடவடிக்கை

**உத்தரகாசி, நவ. 27:** உத்தரகண்டில் நிலச்சரிவால் சுரங்கப் பாதையில் 15 நாள்களாக சிக்கியுள்ள 41 தொழிலாளர்களை விரைந்து மீட்கும் வகையில், மலைப் பகுதியில் செங்குத்தாக துளையிடும் பணியோடு, சுரங்க இடிபாடுகள் பகுதியில் கிடைமட்டமாக துளையிடும் பணியை தொடரவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தவிர, சுரங்கத்தின் மறுமுனை வழியாகவும் கிடைமட்டமாக மூன்றாவது துளையிடும் பணியைத் தொடங்கவும் அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

மலைப் பகுதியில் செங்குத்தாக 86 மீட்டர் ஆழத்துக்கு துளையிடும் பணி ஞாயிற்றுக்கிழமை தொடங்கிய நிலையில், திங்கள்கிழமை இரவு வரை 36 மீட்டர் ஆழம் துளையிடப்பட்டுள்ளது. இதன் வழியே 1 மீட்டர் விட்டமுள்ள குழாய்களைச் செலுத்த இயலும். இந்த துளையின் அருகில் 8 அங்குல அளவுள்ள மற்றொரு துளையை இடும் பணி தொடங்கி 75 மீட்டர் வரை துளையிடப்பட்டுள்ளது. இதன் வழியே செலுத்தப்பட்ட கருவிகள் மூலம் பெரிய துளையின் பாதையில் கடினமான தடைகள் உள்ளனவா என்று கண்காணிக்கப்படுகிறது.

உத்தரகண்டின் உத்தரகாசி மாவட்டத்தின் சில்க்யாரா பகுதியில் கட்டப்பட்டு வரும் சுரங்கப் பாதையில் கடந்த 12-ஆம் தேதி திடீரென மண்சரிவு ஏற்பட்டது. இதனால் சுரங்கப் பாதைக்குள் கட்டுமான பணியில் ஈடுபட்டிருந்த 41 தொழிலாளர்கள், கடுமையான இடிபாடுகளுக்குப் பின்னால் சிக்கிக் கொண்டனர்.

தொழிலாளர்கள் சுவாசிப்பதற்கு ஆக்சிஜன் செலுத்தப்பட்டு வருவதுடன், இடிபாடுகள் வழியாக 6 அங்குலம் அகலமுள்ள குழாய் செலுத்தப்பட்டு, அதன்மூலம் உணவு, அதிகப் புரதம் உள்ள உலர்பழவகைகள் மற்றும் கைப்பேசி, அதற்கான மின்னேற்றிகளும் அனுப்பப்பட்டன.

இதனிடையே, இடிபாடுகளிடையே 80 செ.மீ. விட்டம் கொண்ட குழாயை 60 மீட்டர் தொலைவுக்குச் செலுத்தி தொழிலாளர்களை மீட்பதற்கான பணிகள் தொடங்கி நடந்து வந்தன. குழாயைச் செலுத்துவதற்கு துளையிடப்பட்ட பாதையில் இரும்புக் கம்பிகள் குறுக்கிட்டதால் மீட்புப் பணிகள் அவ்வப்போது நிறுத்தப்பட்டு மீண்டும் தொடங்கப்பட்டன. துளையிடும் 25 டன் எடை கொண்ட ஆகர் இயந்திரம் நிறுவப்பட்டுள்ள கான்கிரீட் தளத்தில் விரிசல் ஏற்பட்டதால், மீட்புப் பணிகள் தொடர்வதில் சிக்கல் நிலவியது.

கான்கிரீட் தளத்தில் உண்டான விரிசல் சீர் செய்யப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை மாலை மீண்டும் பணிகள் தொடங்கப்பட்டன. தொடங்கிய ஒரு மணிநேரத்தில் ஆகர் இயந்திரத்தின் பிளேடுகள் கான்கிரீட்-எஃகு கம்பி இடிபாடுகளில் சிக்கிக் கொண்டன. இதனால் கிடைமட்டமாக குழாய் செலுத்தும் மீட்புப் பணிகள் முழுவதுமாக முடங்கியது.

மீதமுள்ள 10-12 மீட்டர் தொலைவுக்கு பணியாளர்களே நேரடியாக குழாயைச் செலுத்துவதற்கு, இயந்திரத்தின் உடைந்த பிளேடை அகற்றுவது அவசியமானது. இதற்காக ஹைதராபாதிலிருந்து வரவழைக்கப்பட்ட இந்திய ராணுவத்தின் மெட்ராஸ் கட்டுமானப் படைப்பிரிவைச் சேர்ந்த பொறியாளர்கள் குழு வீரர்கள், இயந்திரத்தின் உடைந்த முனைப் பகுதிகளை அகற்றினர்.

இதனிடையே, மலையின் மேல் பகுதியிலிருந்து செங்குத்தாகத் துளையிட்டு 86 மீட்டருக்கு குழாயைச் செலுத்தி தொழிலாளர்களை மீட்பதற்கான மாற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டு, துளையிடும் பணிகள் ஞாயிற்றுக்கிழமை தொடங்கின. எந்த இடையூறும் இல்லாத சூழலில், 100 மணி நேரத்தில் (4 நாள்கள்) தொழிலாளர்களை அடையலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மீட்புப் பணியைக் கண்காணித்து வரும் எல்லை சாலை அமைப்பு முன்னாள் தலைவரும் ராணுவ பொறியாளர் பிரிவு முன்னாள் தலைவருமான லெப்டினன்ட் ஜெனரல் ஹர்பல் சிங் (ஓய்வு) கூறுகையில், 'செங்குத்தாக துளையிடும் பணி தடையின்றி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திங்கள்கிழமை இரவு வரை 36 மீட்டர் ஆழம் துளையிடப்பட்டுள்ளது.

செங்குத்து துளை வழியே செலுத்தும் வகையில் 80 செ.மீ. விட்டமுள்ள குழாய் சட்டங்களை தயார் செய்யும் பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. எந்தவித தடையும் ஏற்படாத நிலையில், 24 முதல் 36 மணி நேரத்தில் 10 மீட்டர் ஆழத்துக்கு துளையிட்டுவிட முடியும்' என்றார்.

**இடிபாடுகள் பகுதியில் துளையிட 6 பேர் குழு:** சுரங்கத்தின் இடிபாடுகள் பகுதியில் இரும்புக் கம்பிகள் குறுக்கிட்டதால் நிறுத்தப்பட்ட துளையிடும் பணியும் மீண்டும் தொடங்கப்பட உள்ளது. இதற்காக, அனுபவம் பெற்ற சுரங்கத் தொழிலாளர்கள் அடங்கிய 6 பேர் குழு வரவழைக்கப்பட்டுள்ளது.

இவர்கள், இடிபாடுகளில் துளையிட்டு ஏற்கெனவே பதிக்கப்பட்டுள்ள 80 செ.மீ. விட்டம் கொண்ட குழாய் வழியாக ஒவ்வொருவராக சென்று, அங்கு குவிந்துள்ள மண் மற்றும் இடிபாடுகளை அகற்றுவர். சுரங்கத் தொழிலில் இவர்கள் 'எலிவளை நிபுணர்கள்' என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் மேற்கொள்ளும் பணிகளையடுத்து, படிப்படியாக மேலும் அதிக மீட்புக் குழாய்கள் பதிக்கப்படும்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், 'இந்த 6 பேர் குழுவினர் 60 செ.மீ. விட்டமுள்ள குழாய் வழியாக சென்று இடிபாடுகளை அகற்றுவதில் நிபுணத்துவம் பெற்றவர்கள். எனவே, இந்த 80 செ.மீ. குழாய் வழியாக சென்று பணிகளை மேற்கொள்வது அவர்களுக்கு கடினமாக இருக்காது. அவர்கள் தலைக் கவசம், சீருடை, முகக் கவசம் மற்றும் பாதுகாப்பு கண்ணாடி அணிந்துதான் இந்தப் பணியில் ஈடுபடுவர். இடிபாடுகளை அகற்றிய பிறகு, எஞ்சிய 10 முதல் 12 மீட்டர் தொலைவுக்கு கைகளால் இயந்திரங்களைக் கொண்டு துளையிடும் பணியை இவர்கள் மேற்கொள்வர்' என்றனர்.

இதுகுறித்து தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய (என்டிஎம்ஏ) உறுப்பினர் லெப்டினன்ட் ஜெனரல் (ஓய்வு) சையது அடா ஹஸ்னைன் கூறுகையில், 'கிடைமட்டமாக துளையிடும் பணியின்போது இடிபாடுகளுக்குள் சிக்கி உடைந்த 'ஆகர்' இயந்திரத்தின் முனைப் பகுதிகள், ஹைதராபாதிலிருந்து விமானம் மூலம் கொண்டுவரப்பட்ட பிரத்யேக பிளாஸ்மா வெட்டும் கருவியின் உதவியுடன் நீக்கப்பட்டது. எனவே, இங்கு வரவழைக்கப்பட்டுள்ள 'எலிவளை நிபுணர்கள்' கைகளால் இயக்கப்படும் இயந்திரத்தைக் கொண்டு துளையிடும் பணியை விரைவில் தொடங்குவர்' என்றார்.

**மூன்றாவது துளை:** சுரங்கத்தின் மறு பகுதியான பர்கோட் முனைப் பகுதி வழியாக கிடைமட்டமாக மூன்றாவது துளையிடும் பணியை மேற்கொள்ளவும் அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். இந்தப் பணியும் விரைவில் தொடங்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

EVA STALIN IAS




இதுவரை சாம்பியன்கள்...

| அணி | பட்டங்கள் |
|---|---|
| அமெரிக்கா | 32 |
| ஆஸ்திரேலியா | 28 |
| பிரான்ஸ் | 10 |
| பிரிட்டன் | 10 |
| ஸ்வீடன் | 7 |
| ஸ்பெயின் | 6 |
| ரஷியா | 3 |
| ஜெர்மனி | 3 |
| செக் குடியரசு | 3 |
| இத்தாலி | 2 |
| குரோஷியா | 2 |
| ஆர்ஜென்டீனா | 1 |
| செர்பியா | 1 |
| சுவிட்சர்லாந்து | 1 |
| கனடா | 1 |
| தென்னாப்பிரிக்கா | 1 |

# இத்தாலி 2-ஆவது முறையாக சாம்பியன்

மலாகா, நவ. 27: டேவிஸ் கோப்பை ஆடவர் டென்னிஸ் போட்டியின் 111-ஆவது சீசனில் இத்தாலி அணி 2-0 என்ற கணக்கில் ஆஸ்திரேலிய அணியை சாய்த்து திங்கள்கிழமை சாம்பியன் பட்டம் வென்றது.

வைல்டு கார்டு வாய்ப்பு மூலம் போட்டிக்கு வந்த இத்தாலி, டேவிஸ் கோப்பை வெல்வது இது 2-ஆவது முறையாகும். அதுவே கடந்த 47 ஆண்டுகளில் இது முதல் முறை. கடந்த சீசனிலும் இறுதிச்சுற்று வரை வந்து அதில் கனடாவிடம் வெற்றியை இழந்த ஆஸ்திரேலியா, இந்த சீசனிலும் அதே விதியைச் சந்தித்திருக்கிறது.

முன்னதாக, ஸ்பெயினில் நடைபெற்ற இறுதிச்சுற்றில் இத்தாலி - ஆஸ்திரேலியா மோதின. இதில் மொத்தம் 3 'டை' இருந்த நிலையில், முதலில் ஒற்றையர் பிரிவில் இத்தாலியின் மேட்டியோ அர்னால்டி 7-5, 2-6, 6-4 என்ற செட்களில் ஆஸ்திரேலியாவின் அலெக்ஸி பாபிரினை வீழ்த்தினார். இந்த ஆட்டம் 2 மணி நேரம் 27 நிமிஷங்களில் முடிவுக்கு வந்தது.

2-ஆவது மோதலில் உலகின் 4-ஆம் நிலை வீரரான ஜானிக் சின்னர் 6-3, 6-0 என்ற செட்களில் அலெக்ஸ் டி மினாரை சாய்த்தார். இந்த ஆட்டத்தை அவர் 1 மணி நேரம் 21 நிமிஷங்களில் முடிவுக்குக் கொண்டு வந்த சின்னர், இத்தாலிக்கு வெற்றிக் கோப்பையை உறுதி செய்தார். இதனால், இரட்டையர் பிரிவு 'டை' கைவிடப்பட்டது.

இத்துடன் இந்தப் போட்டியில் சின்னர் தொடர்ந்து தனது 5-ஆவது வெற்றியைப் பதிவு செய்திருக்கிறார். கடந்த செப்டம்பர் முதல் உலகின் டாப் 10 வீரர்களில் 9 பேரையும் வெவ்வேறு போட்டிகளில் வென்றிருந்த சின்னர், உலகின் நம்பர் 1 வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சிடம் மட்டும் தோல்வி கண்டிருந்தார்.

### முதல் முறை...

டேவிஸ் கோப்பை இறுதிச்சுற்றில் இதற்குமுன் ஆஸ்திரேலியாவைச் சந்தித்த 3 முறையுமே தோல்வி கண்டிருந்த இத்தாலி, தற்போது முதல் முறையாக வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இந்த டேவிஸ் கோப்பை டென்னிஸ் அரையிறுதியில் செர்பியாவுடனான மோதலில் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவுகளில் என இருமுறை ஜோகோவிச்சை சாய்த்து அசத்தினார் சின்னர். இத்தாலி தனது காலிறுதியில் நெதர்லாந்தை தோற்கடித்திருந்தது.

வெற்றிக்குப் பிறகு பேசிய சின்னர், 'இளம் வீரர்களான நாங்கள் எங்களது காலத்தில் இத்தாலிக்காக மீண்டும் ஒரு டேவிஸ் கோப்பையை வெல்ல ஆர்வத்துடன் இருந்தோம். தற்போது அதை கைப்பற்றியிருப்பது ஒரு சிறப்பான அனுபவம்' என்றார்.

நடப்பு சீசனில் இறுதிச்சுற்றுக்கு வந்த இத்தாலி, ஆஸ்திரேலிய அணிகள், நேரடியாக அடுத்த சீசன் குரூப் சுற்றுக்குத் தகுதிபெற்றன. காலிறுதியில் செர்பியாவிடம் தோற்ற பிரிட்டனும் அந்தத் தகுதியைப் பெற்றது.

# '2024 மார்ச்சுக்குள் 31 எம்க்யூ–9பி ப்ரிடேட்டர் ட்ரோன்கள் பெற அமெரிக்காவுடன் ஒப்பந்தம்'

புது தில்லி, நவ.27: அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் 31 எம்க்யூ-9பி ப்ரிடேட்டர் ட்ரோன்கள் (ஆளில்லா விமானம்) கொள்முதல் ஒப்பந்தத்தை அமெரிக்காவுடன் மேற்கொள்ள வேண்டும் என்று இந்தியா திட்டமிட்டுள்ளது.

நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு எதிராக போர்புரிதல், கடல் பரப்பில் கண்காணிப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகளை எம்க்யூ-9பி ப்ரிடேட்டர் ட்ரோன்கள் மேற்கொள்ளும்.

அதிக உயரத்தில் நீடித்து உழைக்கும் அந்த ட்ரோன்கள், வானில் 35 மணி நேரத்துக்கும் மேலாக பறக்கக் கூடியவை. அந்த ட்ரோன்களால் 4 ஹெல்ஃபையர் வகை ஏவுகணைகள், சுமார் 450 கிலோ வெடிகுண்டுகளை சுமந்து செல்லமுடியும்.

இந்நிலையில், அமெரிக்காவிடம் இருந்து 31 எம்க்யூ-9பி ப்ரிடேட்டர் ட்ரோன்களை வாங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையிலான பாதுகாப்புத் தளவாட கொள்முதல் கவுன்சில் கடந்த ஜூனில் ஒப்புதல் அளித்தது.



31 ட்ரோன்களில் இந்திய கடற்படைக்கு 15 ட்ரோன்கள், ராணுவம் மற்றும் விமானப் படைக்குத் தலா 8 ட்ரோன்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இலக்கைத் தாக்கி அழிக்கும் திறன்கொண்ட இந்த ட்ரோன்கள், சீனாவுடன் பகிர்ந்துகொள்ளப்படும் எல்லை கோட்டையொட்டிய பகுதியில் இந்தியாவின் கண்காணிப்பை அதிகரிக்கவும் பயன்படுத்தப்பட உள்ளன.

இந்த ட்ரோன்கள் கொள்முதல் தொடர்பாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாவது: அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் 31 எம்க்யூ-9பி ப்ரிடேட்டர் ட்ரோன்கள் கொள்முதல் ஒப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்பது இந்தியாவின் நோக்கமாக உள்ளது.

இந்த கொள்முதல் தொடர்பான இந்தியாவின் கோரிக்கை கடிதத்துக்கு அமெரிக்க அரசு பதிலளித்த பின், ஒப்பந்தம் தொடர்பாக இரு நாட்டு அதிகாரிகளும் இறுதிக்கட்ட பேச்சுவார்த்தை நடத்துவர். பேச்சுவார்த்தையின்போது ட்ரோன்களின் விலை இறுதி செய்யப்படும். சுமார் 3 பில்லியன் டாலர் (ரூ.25,000 கோடி) மதிப்பில் அவை கொள்முதல் செய்யப்படலாம் என்று தெரிவித்தன.